அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 06/ 2022

திருத்தணி நகராட்சி,
நாள்: 18.05.2022

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2052, வைகாசி மாதம் 06–ஆம் நாள் (20.05.2022) வெள்ளிக் கிழமை காலை 10.00 மணி அளவில் திருத்தணி நகராட்சி மன்ற கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நகர மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

B. Saraswathi
நகர மன்ற தலைவர்
திருத்தணி நகராட்சி.

பொருள் எண்– 1

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 –ன் படி சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்நகரமன்ற தீர்மானம் எண் 04/2022 நாள் 11.04.2022 தீர்மனத்தின் படி பின்வருமாறு மண்டல மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது.

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயித்தல் தொடர்பான அட்டவணை–I .சொத்துவரி**

| பரப்பளவு சதுரடி | உயர்வு செய்வதற்கான காரணி | மண்டலம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | A | | B | | C | | D | |
| | | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு |
| **குடியிருப்பு** | | | | | | | | | |
| 600 சதுர அடிவரை | 1.25 | | 1.25 | | 0.94 | | 0.75 | | 0 |
| 601–1200 | 1.50 | | 1.50 | | 1.13 | | 0.90 | | 0 |
| 1201–1800 | 1.75 | | 1.75 | | 1.31 | | 1.05 | | 0 |
| 1801க்கு மேல் | 2.00 | | 2.00 | | 1.50 | | 1.20 | | 0 |
| **குடியிருப்பு அல்லாதவை** | | 1.00 | | 0.75 | | 0.60 | | 0 | |
| கல்வி நிறுவனங்கள் | 1.75 | | 1.75 | | 1.31 | | 1.05 | | 0 |
| தொழிற்சாலை | 1.75 | | 1.75 | | 1.31 | | 1.05 | | 0 |
| வணிகம் | 2.00 | | 2.00 | | 1.50 | | 1.20 | | 0 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயித்தல் தொடர்பான அட்டவணை–I I .காலிமனைவரி**

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | காலியிடம் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A | 0.40 | 0.80 |
| B | 0.30 | 0.60 |
| C | 0.20 | 0.40 |

தற்போதைய வரி விதிப்பு சதவீதமானது, ஆண்டு மதிப்பில் 13 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. காலிமனை வரி விதிப்பிற்கு ஏற்கெனவே நடைமுறையிலுள்ள அடிப்படை மதிப்பில் 100 சதவிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிப்பு செய்யப்படும். மேற்கூறிய உயர்வின் அடிப்படையில், மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து, சொத்து வரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிப்புகள் செய்யப்படும். இனிவரும் காலங்களில் ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்றும் திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின்படி, புதிய வார்டுகள் வாரியாக மண்டலங்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம் | இந்நகர்மன்ற தீர்மான எண். 168, நாள். 17.07.2008 தீர்மானத்தின்படி தெருக்களின் எண்ணிக்கை | வார்டு மறுவரையறையின்படி தற்போது நிர்ணயம் செய்யப்படும் தெருக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | A | 27 | 27 |
| 2. | B | 21 | 97 |
| 3. | C | 100 | 130 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுச்சீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொது மக்கள் அறியும் வகையில் திருவள்ளூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 13.04.2022-ல் தினதந்தி, மாலைமலர் ஆகிய தமிழ் நாளிதழ்களிலும் மற்றும் Times of India ஆங்கில நாளிதழிலும் செய்தி வெளியிட்டும், அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகள் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெயியிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ திருத்தணி நகராட்சி ஆணையருக்கு சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு 30 நாட்களுக்குள் பொதுமக்கள் மற்றும் இதர தொழில் நிறுவங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதுவும் வரப்பெறவில்லை. எனவே இந்நகரமன்ற தீர்மானம் எண்.04/2022 நாள்.11.04.2022 தீர்மானத்தின்படி 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய மேலே கண்டவாறு தீர்மானித்ததை உறுதி செய்து தீர்மானிக்க மன்றத்திற்கு வைக்கப்படுகிறது. மேலும் சொத்துவரி சீராய்வு குறித்த விவரங்களை மாவட்ட அரசு நாளிதழில் வெளியிடு செய்யவும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : -</u>

1. மன்றம் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானம் எண்.04/2022 நாள்.11.04.2022–ல் தீர்மானித்த விவரங்களை உறுதி செய்து தீர்மானிக்கலாம் .
2. அரசு நாளிதழில் வெளியீடு செய்வதற்கும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ 50,000 / – க்கும் மன்றம் அனுமதிக்கலாம் .
   (ந.க.எண். 345 /2022/அ1)

பொருள் எண்– 2

இந்கராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் உள்ள மண் அடைப்புகளை நீக்கி, அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

பொருள் எண்– 3

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 13.05.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ரயில் நிலையம் எதிரில் (அம்மா உணவகம் பின்புறம்) அரசு புறம்போக்கு இடத்தில் நகராட்சி மூலம் இரு சர்க்கர வாகனம் நிறுத்தம் ஏற்படுத்த வாகனம் நிறுத்தும் பந்தல் அமைத்தல் பணி. | 9.00 | 1. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர் 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.80 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்.05, பலிஜாவாரி திருமண மண்டபத்தின் எதிரில் புதியதாக 2 கடைகள் கட்டுதல் பணி. | 4.00 | 1. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர் 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.40 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள கட்டிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.90 | 1. M/s. RM Construction's ஒப்பந்ததாரர் 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர் 1.60 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண்.5, குமரன் நகரில் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 10.00 | 1. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர் 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.90 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக குளிர் பதன சவப்பெட்டி (Freezer Box) இரண்டு எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் பணி. | 2.00 | 1. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர் 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 2.10 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 6 | தெருவிளக்கு தானியங்கி சுவிட்சுகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணி | 4.90 | 1. திருவாளர்.மார்டன் எலக்டிரிகல்ஸ், சென்னை–64,<br>0.10% மதிப்பீட்டை விட குறைவு<br>2.திருவாளர்.மகாலாட்சுமி எண்டர்பிரைசஸ், சென்னை–3,<br>1.40% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | ரயில்வே சிறுபாலத்திற்கு முன்பு கழிவு நீர் சேகரிப்பு தொட்டி அமைத்து, நீர் மூழ்கி மின் மோட்டார் மூலம் கழிவு நீரை வெளியேற்றம் செய்யும் பணி. | 4.00 | 1. திரு.எ. பிரசாத், ஒப்பந்ததாரர்<br>0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.எஸ்.குமார், ஒப்பந்ததாரர்<br>1.90 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | வார்டு எண்.17, அரக்கோணம் சாலை சந்திப்பு முதல் ரயில்வே கேட் வரை உள்ள மழைநீர் வடிகால்வாய் மீது கவர் சிலாப் அமைத்தல் பணி. | 5.60 | 1. M/s. RM Construction's ஒப்பந்ததாரர்<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.G.இரவிந்திரா, ஒப்பந்ததாரர்<br>1.10 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)